**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 174/2019**

**07.04.2026.**

**DW - 2**

**பி.வா.சா.2. விஜயலெட்சுமி, க/பெ.மணிமாறன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் திருமணமாகி எனது கணவருடன் நிரந்தரமாக வடக்கு சீத்தாராம் என்ற ஊரில் வசித்து வருகிறேன் என்றால் - சரிதான். செங்கம்மாள் எனது அப்பா சீத்தாராமனின் அம்மா ஆவார். எனது தாத்தாவின் மனைவி மற்றும் அம்மா பெயரும் செங்கம்மாள் ஆகும். எனது அப்பா வழி பாட்டியான செங்கம்மாளின் கணவர் பெயர் மாரியப்பன் என்றால் - சரிதான். எனது அப்பா சீத்தாராமன் 1997 ல் இறந்தார். எனது அப்பாவின் தாத்தா மாரியப்பன் ஆவார். மாரியப்பனும் அவரது மனைவி செங்கம்மாளும் எப்போது இறந்தார்கள் என்றால் - தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்கள். மாரியப்பன்-செங்கம்மாள் இறக்கும்போது என்னென்ன சொத்துக்கள் விட்டுச் சென்றார்கள் என்று தெரியுமா என்றால் - 1ம் பிரதிவாதி சொல்லி தெரியும். மனைக்கட்டுக்களை விட்டுச் சென்றார்கள். அந்த மனைக்கட்டுகளில் தான் எனது தாத்தா கோவிந்தராஜ், சிவமணி மற்றும் காசிநாதன் ஆகியோர்கள் மேற்படி மனைக்கட்டுகளில் இருந்த ஒரே கூரை கொண்ட வீட்டை 3 ஆக பிரித்து வசித்து வந்தார்கள் என்றால் - சரிதான். அந்த வீடுகள் அனைத்தும் ஓட்டு வீடு என்றாலும் மண் சுவர் கொண்ட சுமார் 50 வருடத்திற்கு முந்தைய பழைமையான வீடு என்றாலும் - சரிதான். மேற்படி மனைக்கட்டில் உள்ள மேல் கடைசியில் உள்ள வீட்டில் தான் எனது தாயார் தமிழ்கொடியும் அவரது மாமியார் செங்கம்மாளும் வசித்து வருகிறார்கள். நடுவில் உள்ள வீட்டில் முன்பு சிவமணி குடியிருந்து அவர் இறந்தபிறகு அவரது மகன் ரவிச்சந்திரன் அவரது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார். கீழ கடைசியில் உள்ள வீட்டில் காசிநாதன் மகன் ராமலிங்கம் குடியிருந்து வருகிறார் என்றால் - சரிதான். குடியிருப்பு அனைத்தும் மாரியப்பன் காலத்திலிருந்தே வாய்மொழியாக பிரித்துக்கொண்டு குடியிருந்து வருகிறார்கள் என்றால் - சரிதான். மேற்படி மனைக்கட்டில் உள்ள வீட்டிற்கு தெற்கு புறமும் வடக்கு புறமும் காலி இடங்கள் உள்ளன என்றால் - சரிதான். அந்த காலி இடம் மற்றும் வீடு ஆகியவை தான் எனது தாத்தா மாரியப்பன் விட்டுச் சென்றவை என்றால் - சரிதான். இந்த 3 வீடுகளுக்கும் அடுத்த காலிமனைக்கு அடுத்து பாலகிருஷ்ணன் குடியிருந்து வருகிறார் என்றால் - சரிதான். பாலகிருஷ்ணன் பெயரில் அவர் குடியிருக்கும் இடத்திற்கு பத்திரம் உள்ளது என்றால் - சரிதான். அந்த இடமும் ஏற்கனவே மாரியப்பனுக்கு சொந்தமானது தான் என்றால் - சரிதான். எனது தாத்தாவின் தாத்தா மாரியப்பன் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி மனைக்கட்டில் உள்ள குடியிருப்பு வீட்டை மீதமிருந்த நிலங்கள், மனை அனைத்தையும் வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் - சரிதான். அவ்வாறு பிரித்துக்கொண்டபோது மாரியப்பன்-செங்கம்மாளின் பெண் வாரிசுகளுக்கு எந்தவித சொத்துக்களும் தரப்படவில்லை என்றால் - சரிதான். மாரியப்பன்-செங்கம்மாளின் பெண் வாரிசுகள் யாரும் தற்போது உயிருடன் இல்லை. அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் மாரியப்பன் சொத்துக்களில் பாகம் கேட்டு நடவடிக்கை

எதுவும் எடுக்கவில்லை என்றால் - சரிதான். சாதாரணமாக, எனது அப்பா, எனது தாத்தா ஆகியோர்கள் உயிருடன் இருந்த காலத்தில் எங்களது குடும்ப வழக்கப்படி பெண் வாரிசுகளுக்கு பாகம் எதுவும் கொடுப்பது இல்லை என்றால் - சரிதான். அந்த குடும்ப வழக்கப்படி தான் பெண் வாரிசுகளுக்கு பாகம் கொடுக்காமல் மாரியப்பன் சொத்துக்களை கோவிந்தராஜ், சிவமணி மற்றும் காசிநாதன் ஆகியோர்கள் பிரித்துக்கொண்டார்கள் என்றால் - சரிதான். மேற்படி மனைக்கட்டில் உள்ள வீடும் வீட்டிற்கு தெற்கு மற்றும் வடக்காக உள்ள காலிமனை குறித்து தான் வழக்கு நடக்கிறது என்றால் - சரிதான். இந்த சொத்தை பொறுத்தவரையில் கோவிந்தராஜோ அவரது சகோதரர்களோ பாகபத்திரம் செய்துக்கொள்ளவில்லை என்றால் - சரிதான். அனுபவத்தை வைத்து கோவிந்தராஜீம் காசிநாதனும் அவரது பெயர்களில் பட்டா மாற்றிக்கொண்டார்கள் என்றால் - சரிதான். நடுவில் குடியிருக்கும் சிவமணிக்கு கோவிந்தராஜீம் காசிநாதனும் பாகபத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் - சரிதான். அவரவர் அனுபவத்தை அனுசரித்து பாகபத்திரம் எழுதிக்கொடுக்கச் சொல்லிதான் குடும்பத்தில் தகராறு என்றாலும் அதனால் தான் வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் - சரிதான். சிவமணி பாகத்தில் நான் பாகம் கோர முடியாது என்றால் - சரியல்ல. சிவமணி இருந்து தற்போது குடியிருக்கும் இடத்தையும் சேர்ந்து எனது தாத்தா பட்டா மாற்றியுள்ளார். ஆனால் அதற்கு பத்திரம் எதுவும் ஏற்படவில்லை என்றால் - சரிதான். வாய்மொழியாக ஏற்பட்ட பாகவீதத்தை அனுசரித்து சிவமணிக்கு சொத்து கொடுக்கக்கூடாது என்று எனது தாத்தா கோவிந்தராஜ் மோசடியாக பட்டா மாற்றியுள்ளார் என்றால் - சரியல்ல. கோவிந்தராஜ் உயிருடன் இருக்கும் காலம் வரை சிவமணி குடியிருக்கும் வீடு பட்டாப்படி தனக்கு சொந்தம் என்று வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். அதற்கு பட்டா பெயர் அளவில் மோசடியாக மாற்றியதால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் - சரியல்ல. வீடு, மனைக்கட்டு அனைத்தும் இன்றைய தேதி வரை எனது தாத்தா செங்கம்மாள் பெயரில் தான் கிராம வழக்கப்படி உள்ளது என்றால் - சரியல்ல. வழக்கு சொத்து மாரியப்ப தேவருக்கு சொந்தமானது என்பதை காட்டக்கூடிய பத்திரமோ ஆவணமோ எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் - சரிதான். நான் தாக்கல் செய்த நிருபண பிரமாண பத்திரத்தில் மாரியப்ப தேவருக்கு சொத்து சொந்தம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில், என்னென்ன சொத்துக்கள் விடுப்பட்டு விட்டன என்பதை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் - சரிதான். வழக்கிற்காக பொய்யாக ஏராளமான சொத்துக்கள் உள்ளன என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. மாரியப்ப தேவருக்கு சொந்தம் என்று சொல்லப்படும் 3.5 மா சொத்தில் எங்களுக்கு எவ்வளவு பாகம் என்று குறிப்பிட்டு எனது தாத்தா கோவிந்தராஜோ மாரியப்ப தேவரின் மற்ற வாரிசுகளோ எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். மாரியப்ப தேவருக்கு 25 க்கு மேற்பட்ட ஆண், பெண் வாரிசுகள் உள்ளனர் என்று சொல்லிய நிலையில் அவர்கள் யார் யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். வழக்கை திசை திருப்ப வேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. வழக்கு சொத்தில் சிவமணிக்கு பாகம் உள்ளது என்றாலும் அந்த சொத்தில் எனக்கு வாரிசுப்படி கிடைக்காது என்றாலும் சிவமணி வாரிசுகளுக்கு தான் செல்லும் என்றாலும் - சரிதான். சிவமணியின் ஆண் வாரிசுகள் 8 பேர் உள்ளனர். அந்த 8 நபர்களும் சிவமணி சொத்தில் பாகம்

கேட்டு இந்த வழக்கில் கட்சி செய்யவில்லை என்றால் - சரிதான். சாட்சி எங்கள் சொத்தின் மீது வழக்கு போட்டுள்ளதாக சொல்கிறார். எங்கள் சொத்து என்பது மாரியப்ப தேவருக்கு சொந்தமாக இருந்து எனது பாட்டனார் கோவிந்தராஜீக்கு கிடைத்த சொத்துக்கள் தான் என்றால் - சரிதான். வழக்கு சொத்துக்களில் மாரியப்ப தேவருக்கு சொந்தமானது எதுவும் இல்லை என்றாலும் சிவமணியின் தாயார் செங்கம்மாளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் அதில் தான் தனக்கு 1/3 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் - சரியல்ல. மாரியப்ப தேவருக்கு சொந்தமான சொத்துக்களை அவரது வாரிசுகள் ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டு அதனை அனுசரித்து சொத்துக்களை விற்றும் வாங்கியும் உள்ளார்கள் என்றால் - காசிநாதன், கோவிந்தராஜ் சொத்துக்கள் விற்கப்படவில்லை. சிவமணியும் மட்டும் விற்றுள்ளார். சிவமணி விற்பனை செய்த சொத்தும் மாரியப்பனுக்கு சொந்தமானதுதான் என்பதால் சிவமணி விற்றது செல்லாது என்று தெரிவித்து வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். இந்த வழக்கில் சொல்லியுள்ள சொத்துக்களுக்கும் மாரியப்ப தேவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் - சரியல்ல. சிவமணியின் தாயார் சொத்தில் தான் பாகம் கேட்டுள்ளார் என்றால் - சரியல்ல. வீடு, வீட்டின் மதிப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று நான் தெரிவித்திருப்பது சரியல்ல என்றாலும் சீர்திருத்த பிராதில் அது முறையாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றாலும் - சரியல்ல. நீதிமன்றத்தை திசை திருப்ப வேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. எனது வாக்குமூலத்தில், 26 செண்ட் நிலமும், மனையும் இருப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் - சரியல்ல. புல எண்.207/பிஏ/3 பி சேர்க்கப்படவில்லை என்று சொல்வது தவறு என்றாலும் அந்த சொத்தும் சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும் - சரியல்ல. நான் சொல்லியுள்ள வாக்குமூலத்தில் பகுதி பாகப்பிரிவினை என்று சொல்லியிருப்பது தவறு என்றாலும் செங்கம்மாளின் அனைத்து சொத்துக்களும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும் விடுபடவில்லை என்றாலும் - சரியல்ல. வீட்டு வரி, மின்கட்டண சரி, சொத்து வரி ஆகியவை அனைத்தும் வழக்கு சொத்திற்கு மேல்புறத்தில் உள்ள எனது தாயார் குடியிருந்து வரும் வீட்டிற்குரியது தான் என்றால் - சரிதான். வழக்கு சொத்து பூராவும் சிவமணி சொத்து உட்பட எங்களுக்கு பாத்தியப்பட்டதாக நாங்கள் சொல்வது தவறு என்றால் - சரியல்ல. சிவமணிக்கும் அவருக்கு பிறகு ரவிச்சந்திரனுக்கும் எந்தவித சொத்தும் கிடைக்கக்கூடாது என்பதற்காக தான் நாங்களும் காசிநாதனும் சேர்ந்து இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் - சரியல்ல. வழக்கில் வாதி கேட்டவாறு அவர் பாகம் பெற உரிமையுடையவர் என்றாலும் அதனை நான் ஆட்சேபிக்க முடியாது என்றாலும் - சரியல்ல. பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.